

Vol.21 | No. 5 | May 2017

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



Ordination of Fr. John Joseph



Ordination of Fr. Vinu Joseph

Recollection and Chrism Mass
11.04.2017



Diaconate of Dn. Jabanesh
12.04.2017



Feast Mass at Munchirai
21.04.2017



THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No : 5 May 2017

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல்.. | 05 |
| Feast and B'days | 08 |
| நற்செய்தி நிலையம் | 09 |
| சிறுமலர் | 11 |
| வின்சென்ட் தே பவுல் | 12 |
| நோய் தணிப்பு அலகு | 13 |
| இறையழைத்தல் முகாம் | 14 |
| அருட்சகோதரர்களிடமிருந்து.. | 15 |
| செங்கோட்டைச் செய்திகள் | 17 |
| மறைமாவட்டச் செய்திகள் | 18 |
| மறைவட்டச் செய்திகள் | 19 |
| Priest's Transfer List | 22 |
| Bishop's Engagements | 28 |

## Editorial Board

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**
*Chief Editor*
**Fr. Joseph Santhosh**
*Executive Editor*
**Mr. Soundara Raj**
*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443261100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/69/2017 30 April 2017

Dears,

Greetings from Bishop's House, Thuckalay!

The month of May is celebrated as the month of Our Blessed Mother. We celebrate three important feasts of Mary during this month. On 13 May, we keep the feast of Our Lady of Fatima. On 24 May, we celebrate the solemnity of Mary Help of Christians. On 31 May, we commemorate the Visitation of Our Blessed Lady to St Elizabeth. As we enter into this month, it is worthwhile to reflect upon the role that Our Lady plays in the lives of Priests.

It is said that St Pope John Paul II credited Mary's intercession for sparing his life when four bullets from a would-be assassin struck him while he was blessing pilgrims in St Peter's Square on 13 May 1981. A year to the day later, the Pope placed one of those bullets in Mary's crown at the Shrine of Our Lady of Fatima in Portugal. This is an inspiring example of the real, practical and powerful grace of Mary's maternity toward Priests.

The renowned Mariologist Rev. Fr. Emile Neubert, in his celebrated book Mary and Priestly Ministry, speaks about Mary's spiritual maternity. According to him, it stems from her "cooperation in the mysteries of the Incarnation, the Redemption, and the distribution of grace." Let us note how Mary, in these three functions, becomes the mother of Priests:

- The Incarnation sets special grounds for Mary's motherhood of Priests. Mary provided the material cause of Christ's Priesthood. Mary then carried all her Son's future Priests in her womb along with Him. She did not know them individually at that time, but she wished for them what Jesus wished for them at that time, and loved them with the same special love her Son had for them.

- Our Mother Mary's special role in the Redemption: If Mary, in the Incarnation, conceived us spiritually, as it were, then in the mystery of the Redemption she gave us birth. At the foot of the cross, Christ confided Mary to John, who was a Priest, and it is to Priests, above all, that Christ gives His Mother because He has a greater love for them and they have a greater need of her.

•Our Mother Mary's special role in the distribution of grace: Mary has a special love for Priests: if maternity consists essentially in giving and in nurturing life, can any human maternity be understood apart from such a love? Mary loves all the faithful with incomparable love. But she loves Priests with an altogether unique love because she sees in the Priest a greater resemblance to the image of her Son than in any other Christian of equal holiness.

Thus, we can say that what Mary did for Jesus on earth she does for the Priests who continue the unbroken lineage of the Eternal High Priest. She loves, encourages, protects, feeds, embraces, cleans, delights, teaches and keeps him company. She who did not leave her Son at the foot of the Cross remains with the Priest for his singular mission. Mary experienced her son's crucifixion mystically with her steadfast fiat. She knows how to lead the Priest to victory through the cross. Mary assists the Priest in the refinement of his will, in the purification of his heart, in the conformity of his mind to God. Mary aids the Priest in living chastely and growing in charity, wisdom, and fortitude for a martyrdom of love. She who experienced the mystical crucifixion of Jesus will help each Priest to do the same for the joy of the kingdom of God.

The Priest needs the love of Mary's feminine heart to bring him to the fulfillment of the masculine ideal: to protect humanity from all that is detrimental to salvation. Jesus, the New Adam, is the Redeemer and protector of the human family. The Priest is the protector of all that belongs to Christ: men, women, and children, heaven and earth. The Priest is at his best when, like Christ, he guards the dignity and vocation of every man, woman, and child.

God chose Mary to be a guardian of the Priest's dignity and vocation. The Mother gently moves the Priest to be transfigured into Christ. Through the maternal mediation of Mary, the Priest becomes the sacrifice that offers the perfect Sacrifice; the Priest becomes the love that offers Love.

I invite you, dear Fathers, to recognize the important role that Our Blessed Mother plays in the lives of Priests. We need to make ourselves worthy of receiving the protection and guidance of the heavenly mother through our commitment to our Priestly ministry. Let us not pass by this month of Mary without reflecting upon her motherly intervention in the lives of Priests. May we become worthy sons of our heavenly mother!

**CONCLUSION**

Over the years, the Eparchy of Thuckalay has grown steadily. God

is blessing us generously. Our College has a new Principal. It has initiated PG Courses. The strength of the students is gradually picking up. We have two new Priests this year. Our Retreat Centre is going to be inaugurated. Let us be grateful to God for all these blessings that He has lavished upon us. Let us also keep our children in our prayers as they anxiously wait for their results. Most of our Schools are preparing to begin another year of activities. Let us make every effort to give befitting welcome to the children as they enter the portals of our educational institutions to begin the new Scholastic year. And above all, the month of Mary that we are celebrating should help us to intensify our devotion to the Blessed Virgin Mary.

With my prayers and blessings,
Yours in Christ Jesus,

+George Rajendran SDB
Bishop of Thuckalay

## இதர செய்திகள்

**குருக்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்கான ஒருவார கால தமிழ் புலமை முகாம்**

மந்தைக்கு சேவை புரிய மந்தையின் மொழி அறிதல் அவசியம். தமிழ் புலமை நமது குருக்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் தேவையாக இருக்கிறது என்பதை உணர்ந்து, 2017 மே மாதம் 21-27 வரை ஒருவார கால தமிழ் புலமை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**சி.எம்.சி. தக்கலை மாகாணத்திற்கு புது தலைமை இல்லம்**

தக்கலையில் சி.எம்.சி. துறவறத்தார் மாகாணத்துக்குரிய தலைமை அலுவலக செயல்பாடுகளை மேற்கொள்ள தக்கலையில் புது இல்லம் கட்டியுள்ளார்கள். கட்டிட மந்திரிப்பும் சிற்றாலய அர்ச்சிப்பும் மே 18, 2017 அன்று நடைபெறுகிறது.

**சீனாய் தியான இல்லம் மந்திரிப்பும் தொடக்க விழாவும்**

கல்லுவிளையில் அமைக்கப்பட்டு வரும் சீனாய் தியான இல்லத்தின் மந்திரிப்பும் தொடக்க விழாவும் மே 7, 2017 அன்று நடைபெறுகிறது. நிகழ்வை சீரோ மலபார் திருச்சபையின் தந்தை மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் முன்னின்று நடத்துவார். அன்றைய தினம் சிறப்பு தியானச் செய்தியை முரிங்கூர் தியான இல்லத்தைச் சேர்ந்த சகோதரர் மரியா ஜோஸப் கலைமான் அவர்கள் நடத்துவார்.

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Circular letter No/GR/02/2017

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறை மக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

'ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாளெல்லாம் குடியிருக்க வேண்டும்; ஆண்டவரின் அழகை நான் காண வேண்டும்; அவரது கோவிலில் அவரது திருவுளத்தை நான் கண்டறிய வேண்டும்' (திப. 27: 4) என்று திருப்பாடலாசிரியர் கடவுள் தனது விருப்பத்தை வெளிப்படுத்துவது போன்று திருப்பாடலில் வருணித்திருக்கிறார். அவ்வாறு ஆண்டவரின் அருகிலிருப்பதற்காக, அவரது அழகை கண்டு நமது ஆன்மா அமைதி பெறுவதற்காக, நாம் மன்றாடி கேட்பவைகளை கொடுப்பதற்காக, கடவுள் நமக்கு அவருடைய பிரசன்னம் அதிகமாக குடியிருக்கும் "சீனாய்" என்னும் தியான இல்லத்தை தந்திருக்கிறார். இது இறைவனின் மாபெரும் கொடை. எனவே, நாம் அனைவரும் ஒன்றிணைந்து இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். நாம் இன்று கல்லுவிளையில் அமைத்துள்ள 'சீனாய் தியான இல்லம்' நமது மறைமாவட்ட மக்களின் ஆன்மீக வாழ்வை மேம்படுத்துவதற்கான ஓர் அடிக்கல் என்பதில் எந்த வித ஐயமுமில்லை.

ஒடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்களை எகிப்து நாட்டிலிருந்து கடவுள் தேர்ந்தெடுத்து விடுதலை அடைய செய்தது கடவுளின் மீட்பு திட்டத்தின் ஒரு முக்கிய கட்டமாகும். கடவுள் தாமாகவே முன்வந்து தம் மக்களின் அடிமைத்தளைகளை அறுத்து, விடுதலை என்னும் மீட்பை நோக்கி அவர்களை வழிநடத்தினார். ஆண்டவராகிய கடவுள், தான் அளிக்கவிருந்த வளமை மிக்க நாட்டை நோக்கி இஸ்ராயேல் மக்களை மோசேயின் தலைமையில் அழைத்து சென்றார். இவ்வாறு செல்லும் வழியில், கடவுள் இஸ்ரயேல் மக்களோடு சீனாய் மலையில் வைத்து பத்துகட்டளைகளை வழங்கி ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். ஆயினும், அம்மக்கள் இவ்வுடன்படிக்கையை மீறும் போது அவர்களை தண்டித்து, தூய்மையாக்கி மீண்டும் ஏற்றுக் கொண்டார். எனவே, சீனாய் மலை என்பது

கடவுள் தேர்ந்தெடுத்த இஸ்ரயேல் மக்களுடைய வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஏனெனில் பாவத்திற்கு அடிமையாகாமல் கடவுளுடைய கட்டளைகளையும் அவருடைய வார்த்தைகளையும் கடைபிடித்து வாழ்வதற்கும் அதன் வழியாக இறைவனோடு இணைந்து நிறையருள் பெறுவதற்கும் 'சீனாய் மலை' ஒரு தொடக்க இடமாக அமைந்தது. அதே நிலையை நாம் பெறுவதற்காகவே நமது மறை மாவட்டத்திலும் இந்த 'சீனாய் தியான இல்லம்' தொடங்கி இருக்கிறோம்.

சீனாய் மலையில் இறை வார்த்தைகள் மனித வாழ்விற்கான கட்டளைகளாக வழங்கப்பட்டது போன்று, நமது சீனாய் தியான இல்லமும் கடவுளின் வார்த்தைகளை நமது வாழ்விற்காக தரவிருக்கிறது. மாறி வருகின்ற இக்காலக்கட்டத்தில் மனிதன் வாழ்வை இழந்து வழிதெரியாமல் போவதற்கான காரணம், அவனை இயக்குகின்ற இறைவார்த்தைகள் இல்லாமற்போவதே. உலகை கடவுள் தமது வார்த்தையின் மூலமாகவே படைத்தார் என்பதை பழைய ஏற்பாடு மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுவதுடன் வார்த்தையின் வடிவமாகவே இயேசு நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை புதிய ஏற்பாடு நமக்கு எடுத்துரைக்கின்றது. எனவே, அன்றும் இன்றும் என்றும் தூய ஆவியின் தூண்டுதல் பெற்ற இறைவார்த்தைகளே படைப்பனைத்தையும் குறிப்பாக மனித இனத்தை இயக்குகிறது. இவ் இறைவார்த்தைகள் நமக்குள் இருந்தால் நமது வாழ்வில் வறட்சி என்பது இல்லை. "மழையும், பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன; அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவருக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், திருப்பி செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்படும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தை செயல்படுத்தி, எதற்காக அதை நான் அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை"(எசாயா 55: 10-11). ஆகவே, இறைவன் நமக்கு தருகின்ற வார்த்தைகளை முழுமையாக நாம் ஏற்றுக் கொண்டால் இறைவன் விரும்பும் நல்வாழ்வை நமக்கு அது வாரி வழங்கும். இவ் இறைவார்த்தைகளை என்றும் நாம் முழுமையாக நமதாக்கி கொள்ளவேண்டும். ஏனெனில், "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் வெட்டக் கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும்

பிரிக்கும் அளவுக்கு அது குத்தி ஊடுருவுகிறது; எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது; உள்ளதின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கி பார்க்கிறது" (எபி 4: 12).

இவ்வாறாக, இறைவனுடைய வார்த்தைகளை அதிகமாக கேட்டு அமைதியான வாழ்வு வாழ்வதற்காகவே இந்த சீனாய் என்னும் இல்லத்தை இறைவன் நமக்கு அளித்துள்ளார். பல ஆண்டுகளாக நாம் எதிர்பார்த்து காத்திருந்த கனவு நாகர்கோவிலை சார்ந்த திரு. வர்கீஸ் அவர்களின் உதவியால் நனவாகியிருக்கிறது.

இத்தியான இல்ல கட்டிடத்தின் அடிக்கல் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் தேதி இடப்பட்டு அதனுடைய வேலைகள் மிக விரைவாக நடைபெற்றது.

ஆண்டவர் நமக்கு அளித்த இக்கொடையை சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது நம் ஒவ்வொருவடையவும் கடமை. குமரிமாவட்டத்தில் இவ்வாறான தியான இல்லங்கள் இல்லாத காரணத்தினால் மக்கள் கேரளாவுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது. ஆனாலும் மக்களின் தேவைகளை உணர்ந்து நமது மறைமாவட்டம் எல்லா சனிக்கிழமைகளிலும் அழகியமண்டபம், பாலப்பள்ளம் மற்றும் மஞ்சாலுமூடு ஆகிய இடங்களில் ஒரு நாள் தியானம் ஏற்பாடு செய்து நன்முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்று முதல் ஒவ்வொரு நான்காவது சனிக்கிழமையும் சீனாய் தியான இல்லத்தில் வைத்து ஒரு நாள் சிறப்பு தியானம் நடைபெறும்.

இத்தியான இல்லத்தின் திறப்பு மற்றும் அர்ச்சிப்பானது 2017 மே மாதம் 7ஆம் தேதி சீரோ மலபார் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும் தந்தையுமான கர்த்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. இவ்விழாவானது காலை 9.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பித்து தொடர்ந்து அர்ச்சிப்பு வழிபாடு, நற்செய்தி பகிர்வு, திருப்பலி, திவ்ய நற்கருணை ஆராதனை, ஆகியவை நடைபெறும். நற்செய்தி பகிர்விற்காக சாலக்குடி டிவைன் தியான இல்லத்திலிருந்து சகோ. மரியோ ஜோசப் வருகை தரவுள்ளார். அன்னார் அவர்கள் இஸ்லாமிய மதத்திலிருந்து கிறிஸ்தவ வாழ்வுக்கு வந்தவர். இவர் உலகெங்கும் சென்று பல மொழிகளில் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கின்றவர் என்பது குறிப்பிடதக்கது. இத்தியான இல்லத்தின் இயக்குனராக அருட்தந்தை மிஜோ புத்தன்புரயில் நியமிக்கப்பட்டுள்ளார். இத்தியான இல்லத்தின் திறப்பு விழா மற்றும் தொடர்ந்து வருகின்ற அனைத்து

நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற அனைவரும் இறைவனோடு செபிக்க உங்களை அன்போடு கேட்டுக் கொள்வதுடன், அனைவரும் இவ்விழா நிகழ்வுகளில் பங்கு பெற்று இறையாசீர் பெற்றுச் செல்ல உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

•மே மாதம் 7ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஒவ்வொரு பங்கிலும் இவ்விழாவில் கலந்துகொள்ள இயலாத மக்களுக்காக மட்டும் திருப்பலி நிறைவேற்ற வேண்டும். அன்று, மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் கூட்டம் நடைபெறாது.

•அனைவரும் சரியாக காலை 9.30 மணிக்கு முன் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

•அனைத்து அருட்தந்தையர்களும் மக்களுக்கு தேவையான வாகன வசதி செய்து கொடுக்க வேண்டும்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

✠ மார் ஜார்ஜ் இராஜேந்திரன்Sdb
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

| MAY | BIRTHDAYS OF REV. FATHERS |
| --- | --- |
| 02 | Fr. Tobin Alappurackal |
| 10 | Fr. Davis Karukappally CMI |
| 17 | Fr. John Paul Puthuval Puthen |
| 20 | Fr. Thomas George, Pockavarayath CMI |
| 24 | Fr. Jinoy Thottiyil |
| 25 | Fr. Jijy Koipuram |
| 25 | Fr. Robin Kurumullil |
| 27 | Fr. Sam Puthuparampil CMI |
| 28 | Fr. Christudas M. |
| 29 | Fr. Tinu Kottackaparampil CMI |
| 30 | Fr. Thankachan Joseph Sdb |
| 31 | Fr. Justin Sutheesh |
| 03 | Fr. Alex Puthettu FEAST DAY |

# நற்செய்தி நிலையம்



# CATECHISM
# மறைக்கல்வி

> "என் பிள்ளையே, என் வார்த்தைகளை மனதில் இருத்து; என் கட்டளைகளை செல்வமென போற்று. என் கட்டளைகளை கடைப்பிடி நீ வாழ்வடைவாய்; என் அறிவுரைகளை உன் கண்மணி போல் காத்துக்கொள்வாய்"
> (நீமொ: 7: 1-2)

**அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!**

### இரண்டாம் பருவத்தேர்வு

வகுப்பு 1 முதல் 9 வரையுள்ள மாணவர்களுக்கான இரண்டாம் பருவத்தேர்வு மார்ச் 12 ஞாயிற்றுக்கிழமை அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது. வகுப்பு X, XI, XII ஆகிய மாணவர்களுக்கான இரண்டாம் பருவத்தேர்வு ஏப்ரல் 23 ஞாயிற்றுக்கிழமை அந்தந்த மறைவட்டங்களில் வைத்து பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை நடைபெற்றது.

### விசுவாசப் பயிற்சி விழா (வி.பி.வி)

விசுவாசப் பயிற்சி விழா (வி.பி.வி) எல்லா பங்குகளிலும் மிகச் சிறப்பாக நடத்தும் நோக்குடன் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்களுக்கு வி.பி.வி பயிற்சி அளிக்கப்படுகிறது. அவ்வாண்ணமாய் இவ்வருடமும் ஆசிரியர்களுக்கான வி.பி.வி பயிற்சி கருத்தரங்கு ஏப்ரல் 28, 29ஆகிய 2 நாட்கள் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. ஆசிரியர்களுக்கான வி.பி.வி பயிற்சியின் தொடக்க விழாவானது ஏப்ரல் 28 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் பயிற்சிக்கு வருகை தந்த அருட்தந்தையர்களையும், தலைமையாசிரியர்களையும் வரவேற்றார். குருகுல முதல்வர் அவர்கள் மாணவர்களுக்கு சிறந்த முறையில் வகுப்புகள் நடத்த வேண்டும் என்று தனது உரையில் கூறினார். தமிழாக்கம் செய்யப்பட்ட மூன்றாவது பிரிவு பாடநூல்கள் நான்கையும் குருகுல முதல்வர் அவர்கள் வெளியிட அதன் முதல் பிரதியை திரு. மரியதாஸ் ஆசிரியர் அவர்கள் பெற்றுக்கொண்டார். அருட்சகோதரர்கள் ஜெபனேஷ், ரோபின் ஆகியோர் தலைமையில் நமது மறைமாவட்ட அருட் சகோதரர்கள் விசுவாச பயிற்சியை திட்டமிட்டு தகுந்த தயாரிப்புடன் ஆடல், பாடல்கள் மற்றும் விளையாட்டுகள் வழியாக மேன்மைப் படுத்தினார்கள். சப்ஜூனியர், ஜூனியர், சீனியர், சூப்பர் சீனியர் ஆகிய நான்கு

பிரிவுகளுக்கும் தனித்தனியே அருட்தந்தையர்கள் எபின், ஜோஸ் வயலில், டோஜி, அருட்சகோதரி லிபியா சி.எம்.சி அவர்களும் மலையாள ஆசிரியர்களுக்கு அருட்சகோதரி சூனா அவர்களும் வகுப்புகளை நடத்தினார்கள். மேலும் விசுவாசப் பயிற்சி விழா கருத்தரங்கை ஆயர் அவர்கள் பார்வையிட்டு புதிதாக வெளி யிடப்பட்ட பாடநூலை அறிமுகப் படுத்தி, அனைத்துப் பங்குகளிலும் சிறப்பாக நடத்திட வேண்டும், அதற்காக ஆசிரியர்கள் ஒத்து ழைப்பு கொடுக்க வேண்டும் என உரையாற்றினார். இதில் சுமார் 200 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்கள். பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு பாடநூல், தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. புதிய பாடநூல்கள் வெளியிட உதவிய பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், பேரருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் மற்றும் திரு. மரியதாஸ் அவர்களுக்கும், பயிற்சியளித்த அருட்சகோதரர்களுக்கும் மறைக்கல்வி நிலையத்தின் இதயங் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

### போட்டித்தேர்வு

வகுப்பு III முதல் IX வரை உள்ள மாணவர்களுக்கான போட்டித் தேர்வு ஏப்ரல் 30 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமூட்டில் வைத்து பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை நடைபெற்றது. 70 விழுக் காட்டிற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்கள் சுமார் 350 பேர் இப்போட்டித் தேர்வில் பங்குபெற்றனர்.

### தகவல்கள்

ஜூன் 4 ஞாயிற்றுக்கிழமை அன்று புதிய மறைக்கல்வி வகுப்புகள் அனைத்து பங்கு களிலும் தொடங்கப்பட வேண்டும். மறைக்கல்வி தலைமையாசிரியர் களின் கூடுகை ஜூன் 10, 2.30 மணிக்கு கல்லுவிளை அலுவலகத்தில் நடைபெறும்.

அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்,
இயக்குநர்

### வரவிருக்கும் நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| மே 06 | - | கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் குருக்களையும் கன்னியரையும் சந்திக்கிறார். |
| மே 07 | - | சீனாய் தியான இல்ல மந்திரிப்பும் தொடக்கமும் |
| மே 09 | - | குருக்களுக்கான கூட்டம் |
| மே 14 | - | கைக்காரர்கள் & கணக்கர்களுக்கான ஒருநாள் கூட்டம் |
| மே 18 | - | தக்கலை சி.எம்.சி. இல்லம் மந்திரிப்பும் திருப்பலியும் |
| மே 21-27 | - | குருக்கள் & அருட்சகோதரிகளுக்கான தமிழ் புலமை முகாம். |

சிறுமலர் MISSION LEAGUE

# சிறுமலர் மிஷன் லீக் இயக்கம்...

**மிஷன் லீக் தியானம்**

தக்கலை- பிலாங்காலை மறைவட்ட சிறுமலர் மிஷன் லீக் இயக்க ஒருநாள் தியானம் ஏப்ரல் 30 அன்று கல்லுவிளையில் நடைபெற்றது. தியானத்தை எஸ்.எ.பி.எஸ், எப்.சி.சி, சி.எம்.சி துறவற சபை அருட்சகோதரிகள் வழிநடத்தினர். இயக்குநர் அருட் தந்தை ஷோஜோ, முன்னாள் இயக்குநர் அருட்தந்தை ஜினோய், அருட்தந்தை ஜோண்சிலால் ஆகியோர்கள் இறையழைத்தலை மையப்படுத்தி வகுப்புகளை நடத்தினர். சுமார் 75 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பரைக்கோடு அர்னிஷ், காட்டாத்துறை ஜோஷி ஆகியோர் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டனர். இறுதி செபத்திற்குப் பின் பாப்ரசர் கீதம் பாட தேநீர் விருந்துடன் இனிதே நிறைவடைந்தது.

அருட்தந்தை ஷோஜோ,
இயக்குநர்.

---

**பங்கு பிரதிநிதி மன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி பாசறை**

பங்கு பிரதிநிதி உறுப்பினர்களுக்கான பயிற்சியானது இரு மறைவட்டங்களில் நடத்தப்பட்டது. இதர மறைவட்டங்களில் மிக விரைவில் நடைபெறும். இதர மறைமாவட்டங்களுக்கான பயிற்சி குறித்த விபரங்கள் கீழேத் தரப்பட்டிருக்கின்றன.

| DATE | EPARCHY/FORANE | TIME | IN CHARGE |
|---|---|---|---|
| 14-05-17 | Sangamam (Meeting of Kaikars & Accountants. Qurbana included) | 9.30am to 4pm | Bishop<br>Fr Sathianesan<br>Fr Dency |
| 21-05-17 | Thuckalay-Plankalai | 2 pm - 5 pm | Fr Sathianesan |
| 28-05-17 | Nithravilai | 2 pm - 5 pm | Fr Sathianesan |
| 04-06-17 | Padanthalumoodu | 2 pm - 5 pm | Fr Dency |
| 18-06-17 | Arukani | 2 pm - 5 pm | Fr Dency |
| 09-07-17 | Shenkottai Mission | 2 pm - 5 pm | Fr Sathianesan |

VINCENT-DE-PAUL
வின்செந்தியர்

# தக்கலை மத்திய சபைச் செய்திகள்

## சூசைபுரம் வட்டார சபை

**தக்காளிவிளை**

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயத்தில் செயல்படும் புனித அல்போன்சா பெண்கள் கிளைச்சபை சார்பில் வித்யஜோதி திட்டத்தில் கல்விக் கடன் உதவி 30.04.2017 அன்று வழங்கப்பட்டது. அருட்தந்தை வின்ஸ்லால் அவர்கள் 3 மாணவர்களுக்கு இக்கடனுதவியை வழங்கினார். கிளைச்சபைத் தலைவி சகோ. றோஸ்மேரி மற்றும் உறுப்பினர்களும் உடனிருந்தனர்.

**கிள்ளியூர்**

கிள்ளியூர் புனித அன்னைத் தெரசா பெண்கள் கிளைச்சபை சார்பில் உயிர்ப்பு திருநாளை முன்னிட்டு ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தலைமையில் தத்துக்குடும்பங்களுக்கு உதவி செய்தனர்.

**பாலப்பள்ளம்**

பாலப்பள்ளம் ஆண்கள் கிளைச்சபைச் சார்பில் வீடு கட்ட உதவி வழங்கியதோடு பிறரிடமிருந்தும் உதவி பெற்று வீடு கட்டி முடிக்கப்பட்டது. அதன் மந்திரிப்பு நிகழ்வு ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மத்திய சபைத் தலைவர் சகோ ஜயாத்துரை, செயலர் சகோ. எட்வின்சன், கிளைச்சபைத் தலைவர் சகோ ஜெஸ்டின் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

சகோ. ஷாஜன்,
செய்தித்தொடர்பாளர்.

---

## ஆயர் திருநிலைப்பாடு



சங்ஙனாசேரி மறைமாநிலத்தின் துணை ஆயராக நியமனம் பெற்ற அருட்தந்தை டோம் தறயில் அவர்கள் ஆயராக ஏப்ரல் 23, 2017 அன்று, சங்ஙனாசேரியில் வைத்து, பேராயர் மார் ஜோசப் பெருந்தோட்டம் அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர், சங்ஙனாசேரி உயர் மறைமாவட்டத்தின் பகுதிகளான அம்பூரி மற்றும் திருவனந்தபுரம் மறைவட்டங்களைச் சேர்ந்த இறைமக்களின் ஆன்மீகத் தேவைகளைக் கவனிப்பார்.

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## ஆயர் பெயர் கொண்ட விழா: படுக்கை நோயாளிகளோடு கொண்டாடினார்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் அன்னை தெரேசா நோய் தணிப்பு அலகானது 600 மேற்பட்ட படுக்கை நோயாளிகளை கண்டுபிடித்து அவர்களுக்கான வலி நிவாரண சேவைகளை செய்து வருகிறது. இந்த அன்னை தெரேசா நோய் தணிப்பு அலகின் படுக்கை நோயாளிகளுடன் ஏப்ரல் 24 அன்று தன் பெயர் கொண்ட திருநாளை கொண்டாடினார் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள். இந் நோயாளிகளை அவர்களின் இல்லத்தில் சந்தித்து அவர்களுக்கு உதவி செய்து, தம் கரங்களால் குளிப்பாட்டி உரையாடி மகிழ்ந்தார். பின்பு ஆன்மிக ஆலோசனைகளை வழங்கி அவர்கள் குணமடைய இறைவேண்டல் செய்தார். அது மட்டுமல்லாமல் நோயாளிக்கு தேவையான மருந்தும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் நலதிட்ட உதவிகளையும் வழங்கினார். அப்போது கன்னியாகுமாரி சமுக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை சஜி அவர்களும், கன்னியாகுமரி சமுக சேவை சங்கத்தின் பணியாளார்கள் மற்றும் அன்னை தெரேசா நோய் தணிப்பு பாதுகாப்பு அலகின் மருத்துவ குழுவும் உடன் இருந்தனர்.




அருட்தந்தை சஜி எலம்பாசேரில் SDB
இயக்குநர்

---

## புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வாழ்க்கை வழிகாட்டி முகாம்

ஏப்ரல் 8, 2017 அன்று, +2 முடித்த மாணவர்களுக்காக சிறப்பு ஒருநாள் வாழ்க்கை வழிகாட்டி முகாம், கல்லூரி நிர்வாகத்தால் கல்லூரியில் வைத்து நடத்தப்பட்டது. தாளாளர் பேருட்தந்தை ஆன்டணி ஜோஸ் அவர்கள் மாணவர்கள் கல்லூரியில் அளிக்கப்படும் வசதிகளை சுற்றிப்பார்ப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.




# இறையழைத்தல் முகாம் 2017

10 மற்றும் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான இறையழைத்தல் முகாமானது முக்கூட்டுக்கல் இளங்குருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. முகாமானது 23 ஏப்ரல் மாலை 6 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமானது. மறைமாவட்டத்தைச் சார்ந்த 14 பேரும் கேரளாவைச் சார்ந்த ஒரு மாணவரும் கலந்து கொண்டனர்.

சிறு செப வழிபாட்டுடன் மாணவர்கள் இறைவன் பதம் அர்பணித்தனர். தொடர்ந்து இரவுணவு வழங்கப் பட்டது. இரவுணவிற்கு பின்பு பாடல் போட்டியும் குழு பாடல் போட்டியும், குழு விளையாட்டுகளும் நடை பெற்றன. மறுநாள் முகாமின் துவக்க திருப்பலியை அருட்தந்தை மேத்யூ தெக்கேகூற்று அவர்கள் நிறைவேற்றினார். பின் முதல் அமர்வில் அருட்தந்தை எபி அவர்கள் பழைய ஏற்பாட்டில் உள்ள இறையழைத்தல் பற்றியும் , அருட்தந்தை ஜஸ்டின் அவர்கள் குருத்துவக் கல்லூரி வாழ்க்கை முறை மற்றும் விதிமுறைகள் குறித்து வகுப்பு அளித்தார்கள்.



மாலையில் மாணவர்கள் நடைபயணமாக காரோடில் உள்ள தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்திற்கு சென்று அங்குள்ள மனநல நோயாளிகளை சந்தித்து கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். இரவு சிறப்பு நிகழ்வாக விவிலிய வினாடி வினா நடைபெற்றது.

மறுநாள் அருட்தந்தை மேத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் இறையழைத்தல் வெளிப்படும் சூழ்நிலை குறித்தும் மறைசாட்சி டெலிமாக்குஸ் குறித்தும் கருத்துக்களை தெரிவித்தார்-.

மதியம் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் மாணவர்களை சந்தித்தார். ஆயர் அவர்கள் மதிய உணவுக்குப் பின் இறைப்பணியில் குருக்கள் ஏன் தேவை என்பதைக் குறித்தும் மறைமாவட்டத்தைக் குறித்தும் விளக்கினார்.

மாலையில் இரவு ஒலிம்பிக் என்ற சிந்தனையில் போட்டிகள் நடைபெற்றன. காலைத்

திருப்பலிக்குப் பின் காலை உணவுடன் முகாம் இனிதே நிறைவடைந்தது. முகாமிற்கு தேவையான உதவிகள் வழங்கிய அருட்தந்தையர்கள் ஜஸ்டின், ஷோஜி, மேத்யூ மற்றும் அருட்சகோதரர்களுக்கும், மாணவர்களின் இறையழைத்தலை உணர்ந்து அவர்களை முகாமிற்கு அனுப்பி வைத்த பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றி. தொடர்ந்து மறை மாவட்டத்தில் இறையழைத்தல் பெருக அனைவரும் செபிப்போம்.

அருட்தந்தை பெலிக்ஸ்,
இறையழைத்தல் இயக்குநர்.

---

## அருட்சகோதரர்களிடமிருந்து...




விடுமுறைக்காக வீடு திரும்பிய அருட்சகோதரர்கள் ஏப்ரல் 7 - ஆம் தேதியன்று மறைமாவட்டத்திற்கு வருகைத் தந்து பல்வேறு மறைப்பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். புனித வார நிகழ்வுகளில் அருட்தந்தையர்களுக்கு உதவி புரிய வெவ்வேறு பங்குகளுக்கு அனுப்பப்பட்டார்கள். அருட்சகோதரர் ரோபின் ஜோசப் அவர்கள் காறோயா பட்டத்தை ஏப்ரல் 10, 2017 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்துப் பெற்றுக்கொண்டார் .சூசைபுரம் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் ஜெபனேஷ் லாசர் மற்றும் சுபின் ஸ்கரியா புத்தன்புரைக்கல் ஆகியோர் திருத்தொண்டர்களாக, ஏப்ரல் 12, 28 தேதிகளில் முறையே பிலாங்கரை லொரேட்டோ மாதா ஆலயத்தில் வைத்தும் உரோமையில் மாதர் எக்ளேசியா குருத்துவ மடத்தில் வைத்தும் அருட்பொழிவு செய்யப்பட்டனர்.

17, 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் அருட்தந்தையர்கள் சங்கமத்தில் நலப்பணி முகாம் (work camp) கலந்து கொண்டார்கள். 17- அன்று ஆயர் அவர்களும் ஒருவராக வேலை செய்தது சிறப்பம்சமாகவும், அருட் சகோதரர்களை வியக்க வைக்கவும் செய்தது. அத்தோடு அன்றைய நாட்களில் அருட்சகோதரர்களை சந்தித்த அனைத்து அருட் தந்தையர்களுக்கும் நன்றி.

### புதிய குருக்கள்

இவ்வாண்டு நம் மறைமாவட் டத்திற்காக இரு புதியக் குருக்கள் கிடைக்கப் பெற்றுள்ளார்கள். காட்டாத்துறை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் ஏப்ரல் 19 அன்றும், காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜான் ஜோசப் அவர்கள் ஏப்ரல் 20 அன்றும் அருட்பொழிவு செய்யப்பட்டனர்.

அருட்சகோதரர்களின் கூட்டாண்மையிலிருந்து அருட்தந்தையர்களாக திருநிலைப் படுத்தப்பட்டிருக்கும் அருட்தந்தையர்களுக்கு வாழ்த்துகள். இத்திருப்பட்ட நிகழ்வுகளில் முழுமையாகப் பங்கெடுத்து, திருப்பட்ட நிகழ்வுகள் சிறப்புற அமைய உதவி புரிந்த அருட்சகோதர்களுக்கும் நன்றி. ஏப்ரல் 22 முதல் 24 வரை அருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்களின் வழிகாட்டலில் ஆலயங்களின் வரலாறு மற்றும் புள்ளிவிபரங்கள் சேகரிக்க அருட்சகோதரர்கள் அனுப்பப் பட்டார்கள். 25- ஆம் தேதி அன்று அவை ஒப்படைக்கப்பட்டது.

## ஆயரின் பெயர்கொண்ட திருவிழா

24- அன்று ஆயர் அவர்கள் தமது பெயரின் பாதுகாவலரான புனித ஜார்ஜியாரின் விழாவை கொண்டாடினார். 26 அன்று அருட்சகோதரர்கள் ஒன்றிணைந்து கண்கவர் கலைநிகழ்ச்சிகள் வழியாக ஆயர் அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் விழாவைக் கொண்டாடினர்.

## விசுவாசப் பயிற்சி விழா

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான விசுவாசப் பயிற்சி விழாவுக்கான தயாரிப்புப் பயிற்சி ஏப்ரல் 28 மற்றும் 29 தேதிகளில் கல்லுவிளை ஆசீர் கலையரங்கில் அருட்சகோதரர்களால் வழங்கப்பட்டது. இதில் பாடல், ஆடல் மற்றும் பல்வேறு விளையாட்டுகளைக் கற்றுக் கொடுத்தனர். 30 ஆம் தேதி முதல் அருட்சகோதரர்களும் இப்பயிற்சி நடத்த வெவ்வேறு ஆலயங்களுக்கு அனுப்பப் பட்டார்கள்.

## வாழ்த்துகள் மற்றும் நன்றிகள்

அருட்சகோதரர்களின் புதிய தலைவராக அருட்சகோ. டோஜி மற்றும் துணைத்தலைவராக அருட்சகோ. ரோபின் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் பணி சிறக்க வாழ்த்துகள். இவ்வாண்டு அருட்சகோ. மகேஷ் கல்லுவிளை கன்னியாகுமரி சேவை மையத்திலும், அருட்சகோ. ஜோஸ் மஞ்சாலுமூடு பங்கிலும், அருட்சகோ. அஜின் செங்கோட்டை மறைப்பரப்பு தளத்திலும் தங்கள் களப்பணியை தொடங்கினர். அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகள்.

2016-2017 கல்வியாண்டில் நன் முறையில் வழிநடத்திய அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்களுக்கும் விடுமுறையின் போது அருட்சகோதரர்களுக்கான உணவு மற்றும் உறைவிடம் தயார் செய்த அருட்தந்தை ஜோண்சிலாஸ் அவர்களுக்கும் நன்றி. மேலும் எங்களது தேவைகளுக்கு உதவி புரிந்த அருட்தந்தை டென்ஸி அவர்களுக்கும், ஒரு சகோதரனைப் போல எங்களை சந்தித்துப் அவ்வப்போது வழிகாட்டுதல் வழங்கும் அருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்களுக்கும் நன்றி. விடுமுறை நாட்களில் பல்வேறு விதங்களில் அருட்சகோதரர்களின் வளர்ச்சி பாதைக்கு வழிகாட்டிய அனைத்து அருட்தந்தையர்களுக்கும் இறைமக்கள் அனைவருக்கும் நன்றி.

அருட்சகோ. ஜெபனேஷ்,
அருட்சகோதரர் தலைவர்.

# செங்கோட்டைச் செய்திகள்

## மரியாயின் சேனை தொடக்கம்

செங்கோட்டை திருத்தொண்டு தள மரியாயின் சேனை இயக்கம் 25.3.2017 சனிக்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்களால் புதூர் புனித பாத்திமா அன்னை குருசடியில் வைத்து தொடங்கப்பட்டது. புளியரையை சேர்ந்த 8 பெண்களும், அருட்சகோதரி தியா அவர்களும் கலந்து கொண்டனர். புலரி ஆங்கிலப் பள்ளி தாளாளர் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் சேனை வீரர்கள் செபமாலை ஏந்தி தீய சக்திகளோடு போர்புரிந்து மறுவாழ்வு பெற வேண்டும் என்று உரையாற்றினார். தொடர்ந்து சிற்றுண்டி வழங்கப்பட்டது.

## தன்னார்வப் பணியாளர் கூடுகை

தன்னார்வப் பணியாளர்கள் கூடுகை 2.4.2017 ஞாயிறு மாலை 4.30 மணியளவில் மேக்கரை புனித ஜார்ஜியார் ஆலயத்தில் நடைபெற்றது. தன்னார்வ பணியாளர்கள் தங்களின் செயல்பாடுகள் பற்றி தெரிவித்தனர்.

## நற்செய்தி கூட்டம்

தவக்காலத்தை முன்னிட்டு புளியரை புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் 10.4.2017 முதல் 12.4.2017 வரை மூன்று நாட்கள் நற்செய்தி கூடுகை நடைபெற்றது. அனைவரும் ஒப்புரவு அடையாளம் மேற்கொண்டு நற்கருணை உட்கொண்டனர்.

## ஆயருடன் புனித வெள்ளி

புனித வெள்ளி ஆராதனை 14.4.2017 அன்று காலை 7 மணி முதல் நடைபெற்றது, காலை 10 மணியளவில் நடைபெற்ற திருப்பாடுகளின் வரலாறு நிகழ்வை ஆயர் அவர்கள் தலைமையேற்று சிறப்பித்தார். 11.30 மணிக்கு புளியரை பங்கில் தொடங்கிய திருச்சிலுவைப் பாதை பவனி புதூர் புனித பாத்திமா குருசடியில் ஆயர் அவர்களின் சிறப்புரையுடன் நிறைவடைந்தது. அருட்தந்தை லிஜோ அவர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தார். தொடர்ந்து நேர்ச்சை கஞ்சியும் வழங்கப்பட்டது. அன்றைய தினம் எப்.சி.சி துறவற சபையினரையும் சந்தித்து பேசினார்.

## ஆண்டுவிழா

புலரி சமூக சேவை அமைப்பின் கீழ் செயல்பட்டு வரும் புனித ஜான் மாண்டிசேரி பள்ளியின் ஆண்டுவிழா 6.4.2017 அன்று சிறப்பாக நடைபெற்றது.

அருட்தந்தை பீட்டர்,
ஒருங்கிணைப்பாளர்.



மறைமாவட்டச் செய்திகள்

# மறைமாவட்ட செய்திகளும் நிகழ்வுகளும்

## குருத்துவ ஆயத்தப் பட்டங்கள்

சி.எம்.ஐ. சபையின் உறுப்பினரும், பிலாங்காலை சிறுமலர் ஆலயத்தைச் சேர்ந்தவருமான அருட்சகோதரர் ஆன்டோ பிரபின் அவர்கள் பெங்களூரு, தர்மாராம் கல்லூரியில் வைத்து, மார்ச் 29, 2017 அன்று திருத்தொண்டராக அருட்பொழிவு செய்யப்பட்டார். அருட்சகோதரர்கள் அபிலாஷ் சேவியர் மற்றும் ஷிஜோ ஜோஸ் ஐக்கரக்குந்நேல் ஆகியோர் ஹவுப்தியாக்கோனா (திருத்தொண்டராவதற்கு முந்தைய பட்டம்) பட்டத்தை ஏப்ரல் 17, 28, 2017 தேதிகளில் உரோமையில் முறையே சேதெ சாப்பியன்செ (Sede Sapientiae) மற்றும் உர்பானோ குருமடங்களில் வைத்துப் பெற்றுக்கொண்டனர்.

## குருக்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்கான ஒருநாள் தியானம்

புனித வாரத்தின் செவ்வாய் (ஏப்ரல் 11, 2017) அன்று மறைமாவட்டத்தில் பணிபுரியும் அருட்தந்தையர்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் ஒருநாள் தியானம் தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. கோட்டாறு மறை மாவட்டத்தைச்சேர்ந்த அருட்தந்தை ஏரேணிமூஸ் அவர்கள் நற்கருணை ஆண்டவர் என்னும் மையச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு இறைவார்த்தையைப் பகிர்ந்தார். பிற்பகலில், குருத்துவம் என்னும் மேலான கொடையை நிறுவிய ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் விதமாக திருப்பலியும் நடைபெற்றது.

## அருட்தந்தை ஜான் போஸ்கோ சேச அவர்களுக்கு பிரியாவிடை

மறைமாவட்டத்திற்கு சொந்தமான புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2018 ஜூன் தொடங்கி 2017 ஏப்ரல் வரை கல்லூரி முதல்வராக பணியாற்றி வந்த, ஏசு சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஜான் போஸ்கோ அவர்கள் தமது பணியை நிறைவு செய்து ஏப்ரல் 21, 2017 அன்று பிரியாவிடை பெற்றுச் சென்றார். ஆயர் அவர்களும் கல்லூரி நிர்வாகமும் ஆசிரியர் குழாமும் அருட்தந்தை அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

## புனித அல்போன்சா கல்லூரிக்கு புதிய முதல்வர்

திரு ஐசயா சக்கரியாஸ் MA, M.Ed., Ph.D. அவர்கள் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புதிய முதல்வராக ஏப்ரல் 24, 2017 அன்று அதிகாரபூர்வமாக பணியேற்றார்.






## சூசைபுரம் மறைவட்டம்

### தவக்கால சிறப்பு தியானம்

சூசைபுரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் ஏப்ரல் 9 அன்று ஒருநாள் தவக்கால தியானம் நடைபெற்றது. தூத்துக்குடி கத்தோலிக்க ஊழியர்கள் இத்தியானத்தை வழிநடத்தினர்.

### ஆயர் சந்திப்பு

ஏப்ரல் 9 ஞாயிற்றுக்கிழமை ஆயர் அவர்கள் மாங்கரை புனித வியாகப்பர் ஆலய இறைமக்களையும், பக்த இயக் கங்களையும் சந்தித்து உரை யாடினார்.

### ஆலயக்கட்டுமானப் பணி

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயக்கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

### தவக்காலத் திருப்பயணம்

கிள்ளியூர் புனித தேவமாதா ஆலய மக்கள் தவக்காலத் திருப்பயணமாக ஏப்ரல் 8 அன்று மலையாற்றூர் புனித தோமையார் மலைக்குச் சென்றனர். பங்குத் தந்தை அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தமிழில் திருப்பலி நிறைவேற்றினார்.

### புனித வார நிகழ்வுகள்

சூசைபுரம் வட்டாரத்தில் அனைத்துப் பங்குகளிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கிள்ளியூர் தேவமாதா ஆலயத்தில் பாஸ்கா அப்பம் செய்வது பற்றி வகுப்பு நடத்தப்பட்டது. பெசகா வியாழனன்று அனைத்து வீட்டாரும் அப்பம் செய்து கொண்டு திருப்பலிக்குப் பின் பகிர்ந்து உண்டனர்.

சூசைபுரம் ஆலயத்தில் நடைபெற்ற திருச்சிலுவைப் பாதையில் இயேசுவின் திருவுடல் தாங்கிய பேழை பவனியாக கொண்டு செல்லப்பட்டது.

## நித்திரவிளை மறைவட்டம்

### முஞ்சிறை

முஞ்சிறை திருத்தலத் திருவிழா 21.4.17 மாலை 6.00 மணிக்கு



திருக்கொடியேற்றுதலுடன் ஆரம்பாகி 30.04.2017 மாலை 6.00 மணிக்கு திருக்கொடி யிறக்குதலுடன் நிறைவடைந்தது. மேதகு ஆயர் அவர்கள் முதல் நாளன்று திருக்கொடியேற்றி திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து ஆயர் அவர்களின் பெயர்கொண்ட திருநாள் வாழ்த்துகள் பங்கின் சார்பில் பங்குத்தந்தை அருட்தந்தை அஜீஷ் அவர்கள் தெரிவித்தார். இரண்டாம் நாள் பெண்கள் தினமாகவும், மூன்றாம் நாள் முதல் திருவிருந்து அருளடையாளமும் நடைபெற்றது. அன்று மாலை 4 மணிக்கு இராசை திருப்பலியும் நடைபெற்றது. நான்காம் நாள் முதல் ஆறாம் நாள் வரை அருட்தந்தை பெலிக்ஸ் கும்பகோணம் அவர்கள் தலைமையில் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. ஏழாம் நாளன்று அருட்தந்தை மிஜோ அவர்கள் தலைமையில் நற்கருணை ஆராதனையும் எட்டாம் நாளன்று மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் அவர்கள் தலைமையில் பக்த இயக்க ஆண்டுவிழா நடைபெற்றது. ஒன்பதாம் நாள் திருப்பலிக்குப்பின் தேர்பவனியும், நிறைவு நாளன்று நேர்ச்சை மெழுகுவர்த்தி ஏற்றுதல் நிகழ்வும் நடைபெற்றது. அன்றைய திருப்பலியை நவகுருக்கள் நிறைவேற்றினர். தொடந்து புனித ஜார்ஜியார் திருப்பவனியும், அன்பின் விருந்தும் நடைபெற்றது. தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு செபமாலையுடன் திருக்கொடியிறக்கத்துடன் திருவிழா இனிதே நிறைவடைந்தது.

### புனித வார நிகழ்வுகள்

அனைத்துப் பங்குகளிலும் புனித வார நிகழ்வுகள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## படந்தாலுமூடு மறைவட்டம்

### மழலையர் பள்ளி ஆண்டுவிழா

அதங்கோடு புனித மரிய கொரற்றி மழலையர் பள்ளியின்



33 வது ஆண்டுவிழா ஏப்ரல் 22 சனிக்கிழமையன்று அருட்தந்தை மாத்யூ முளங்ஙாசேரில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதற்கு தயாரிப்பாக மழலைகள் மற்றும் பெற்றோர்களுக்கான கலை மற்றும் விளையாட்டு விழா ஏப்ரல்

20 அன்று நடைபெற்றது. பள்ளி ஆண்டுவிழா பெற்றோர்களின் இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. ஆசிரியை திருமதி ஸ்டெல்லா அவர்கள் அறிக்கை சமர்பித்தார். பெற்றோர் இயக்கத் தலைவி திருமதி ஜெயா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். பங்குத்தந்தை அவர்கள் தலைமையுரையும், சகோ. பெர்லின் அவர்கள் சிறப்புரையுமாற்றினர். தொடர்ந்து கலை மற்றும் விளையாட்டுப் விழாவில் வெற்றி பெற்ற மழலைகளுக்கும் பெற்றோர்களுக்கும் பரிசு வழங்கப்பட்டது. மதியம் அன்பின் விருந்தும் நடைபெற்றது. விழாவின் இடையிடையே பெற்றோர்கள் மற்றும் மழலைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

**கல்வாரிப் பாதை**

அனைத்துப் பங்குகளிலும் புனித வார நிகழ்வுகள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தெற்றியோடு புனித பவுல் ஆலயத்தில் இயேசுவின் திருஉடல் தாங்கிய பேழை பவனி நடைபெற்றது.

அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயத்தில்



இவ்வாண்டு முதன்முறையாக புனித வெள்ளியன்று இயேசு கிறிஸ்துவின் கல்வாரிப் பாடுகள் நேரடியாக நடித்துக் காண்பிக்கப் பட்டது.

தகவல் சேகரிப்பு: திருமதி.ஹேமா/சினேக லதா/செலின் மேரி

---

### துறவற நிரந்தர வார்த்தைப்பாடு

சி.ம்.சி. துறவறச்சபையைச் சேர்ந்த அருட்சகோதரி நேகா மற்றும் லிபியா ரோஸ் ஆகியோர் ஏப்பரல் 8, 2017 அன்றும், எப்.சி.சி. சபையைச் சேர்ந்த அருட்சகோதரி ஆன் மரியா அவர்கள் ஏப்ரல் 27, 2017 அன்றும் தங்களது துறவற நிரந்தர வார்த்தைப்பாட்டை ஏற்றுக்கொண்டனர்.



# CONSOLIDATED LIST OF TRANSFERS 2017

| Sl No. | Name | Current Place | Transferred to | Transfer effected from | Relieved From being | Current and Additional Assignments in the Diocese |
|---|---|---|---|---|---|---|
| 1. | Rev. Fr. Sanil Pan-thuchrackal | Nagercoil | Nithravilai | 5th July 2017 | Vice Principal | Parish priest of Jayamatha Church, Nithravilai<br>Director of Karunai Illam<br>Student: B.Ed, Kirathoor<br>Director: AIDACT |
| 2. | Rev. Fr. Mijo Pu-thenpurayil | Christura-japuram | Kattathurai | 24 May 2017 | Parish priest<br>School Correspondent | Secretary: Pastoral Council;<br>Director Sinai Retreat Center<br>Parish Priest St. Michael parish<br>Director of Evangelization Course |
| 3. | Rev. Fr. Printo Kurias | | | | | Assist. Director of Sinai Retreat Center, Kalluvilai |
| 4. | Rev. Fr. Tobin Alapurackal | Shenkottai | Arukani | 24 May 2017 | Director: PSSS<br>Vanchinagar: Parish priest | Parish Priest of Holy Family Church.<br>Arukani Forane Director<br>Administrator of Holy Family School<br>Director of Pulari Enterprises<br>Director of De-Addiction Ministry |
| 5. | Rev. Fr. Geo Choozhikunnel | Thettiy-ode | Malaicode | 24 May 2017 | Parish Priest of Sts. Peter and Paul church | Parish Priest of Holy Cross Church, Mala-icode |
| 6. | Rev. Fr. Lijo Mathew | Shenkottai | Shenkottai | 24 May 2017 | Parish priest of , Little Flower Church, Puli-yarai | Assistant Teacher of Pulari school<br>Parish priest of St. Thomas Church, Vanchi-nagar |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7. | Rev. Fr. Seby Mani-malakandathil | Kattathu-rai | Shenkottai | 24 May 2017 | Parish Priest<br>Director: Pulari Enterprises In charge: Vellambi mission | Parish priest of Little Flower Mission, Puliya-rai, Director of Pulari Social Service Society and Montessori school<br>In Charge: St. Thomas Dispensary |
| 8. | Rev. Fr. Linslal Mangalath | Soosaipu-ram | Christura-japuram | 24 May 2017 | Asst. Correspondent of APJMSchool | Parish priest of Christ the King Church, Christurajapuram<br>Correspondent of Jayamatha Matriculation school |
| 9. | Rev. Fr. Joseph Santhosh | Kalluvilai | Killiyoor | 24 May 2016 | - | Diocesan Youth director<br>Chief Editor of Iraiarul, Sinai and Arul Thoo-thu publications<br>In charge of translation of 'Prayer of the church.<br>In charge of Diocese's web-site<br>Parish Priest of Devamatha Church, Killiyoor<br>Administrator of St. Mary's Tamil Medium and English medium schools |
| 10 | Rev. Fr. John Joseph | New priest | Killiyoor | 24 May 2017 | | Assistant Parish priest of Devamatha Church, Killiyoor<br>Asst. Youth Director<br>Sub. Editor of Diocesan Publications<br>In charge of St. Thomas Church, Mathapur-am; |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11. | Rev. Fr. Antony Madapurackal | Vailankarai | Anumugam | 15 February 2017 | Assistant Parish Priest of St. Anthony's Church Vailankarai.Assistant Parish Priest of Amala Maria Mission Church, Cheenivilai | Parish priest of St. Loretto Matha Church, Anumugam (Residence)<br>Parish priest of St. Thomas Church, Pathukani<br>In-charge of Maruthamparai mission<br>Student of Bachelor of Education (private) |
| 12. | Rev. Fr. Mathew Thekkekutt | | | 24 May 2017 | -- | Spiritual father, St. Mary's Minor Seminary, Mukkoottukal<br>Parish priest of St. Francis of Assisi Church, Mezhacode Desamsa Club |
| 13. | Rev. Fr. Anil Raj Dominic | Vayalinkarai | Kattathurai | 24 May 2017 | Assistant Parish priest, Vailankarai | Asst. Parish Priest of St. Michael Church, Kattathurai, Assistant Director of Pulari press<br>In charge of Vellambi mission<br>Asst. Director of Family Apostolate |
| 14. | Rev. Fr. Justin Sudeesh | Valiathovalai | Soosaipuram | 24 May 2017 | Assistant Parish priest, Christ the King Church, Valiathovalai | Assistant Parish priest Holy Family Church, Thakkalivilai<br>Assistant Teacher and Headmaster of APJM School, Assistant Parish priest of St. Joseph Church, Soosaipuram |
| 15. | Rev. Fr. Ritto Thoompunkal | Lourdes Parish, Trivandrum | Thettiyode | 24 May-30 Sept. 2017 | Assistant Parish priest of Lourd Church | In Charge of Sts. Peter and Paul Parish, Thettiyode,Assistant Teacher SH School, Padanthal<br>Assist. Catechism, Marriage Tribunal Notary |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16. | Rev. Fr. Jose Vayalil | Killiyoor | Mukkoot-tukal | 24 May 2017 | Parish priest of Devamatha church, Killiyoor<br>In charge of St. Thomas Mission, Mathapuram | Assistant Director of CML<br>Parish Priest of Holy Family Church, Muk-koottukal<br>Administrator and PET Teacher (Govt. Post) of Holy Family school |
| 17. | Rev. Fr. Vinu D. Joseph | New Priest | Vayalinkarai | 24 May 2017 | | Assistant Director of KKSSS<br>Assistant Parish priest of St. Antony's Church, Vailankarai<br>Asst PP of Cheeniviali |
| 18. | Rev. Fr. Ajin Jose | Kumali | Nagercoil | 24 May 2017 | Assistant Parish priest St. Thomas Forane Church, Kumily | Vice Principal, St. Alphonsa, Nagercoil<br>In charge of Thadikkarakonam Mission |
| 19. | Rev. Fr. Prince Maliyil | -- | -- | 24 May 2016 | | Principal of the Sacred Heart Mat. HS School, Padanthalumoodu, In-charge of the St. Joseph mission, Kunnuvilai<br>Secretary Presbyterium Council |
| 20. | Rev. Fr. Sumesh Valliyamthadathil | | | 15 February 2017 | | Parish priest of Lourdes Matha Church, Chenamcode<br>In-charge of Kulasekaram mission<br>Teacher in St. Mary's central school, Kaliyal<br>In-charge of Syro-Malabar Migrants in the diocese |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21. | Rev. Fr. Thomas Sathianesan | ---- | ----- | 24 May 2017 | Eparchial Secretory | In-charge of formation of statutes of the diocese<br>Judicial Vicar |
| 22. | Rev. Fr. Thomas (Abin) Poovathum-moottil | Mukkoot-tukal | Chennai | 24 May 2017 | Parish priest of Holy Family Church, Muk-koottukal<br>Administrator of Holy family school<br>Teacher in the St. Mary's Minor seminary | Student of Master of Social work at Loyola college, Chennai |
| 23. | Rev. Fr. Thomas Powathuparampil | | | 24 May 2017 | | Correspondent of St. Alphonsa Matriculation School.<br>Parish priest of St. Alphonsa Shrine, Nager-coil<br>Director, Education commission in the Epar-chy of Thuckalay |
| 24. | Rev. Fr. Christudas M | Nithravilai | Germany | 5 July 2017 | Chancellor of the diocese<br>Parish priest of Jayamatha Church, Nithravilai<br>Director of Ecumenical council of the diocese<br>Director of Karunaill-lam<br>Director of AIDACT | Overseas mission, Rottenburg-Stuttgart diocese |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25. | Rev. Fr. Ajeesh Attiyil | | - | 24 May 2017 | | Parish priest of St. George Church, Munchirai Director of DB Tech. Skills Training Centre, Director of Family apostolate |
| 26. | Fr. Augustine Thalodil | | - | 24 May 2017 | - | Marriage Tribunal Defender of bond |
| 27. | Fr. Jini Joseph | Rome | Thettiyode | September 2017 | | Parish priest of St. Paul's Church, Thettiyode Director, Pulari Communication |
| 28. | Fr. Robins Kuzhikodil | | | 24 May 2017 | | In-charge of St. Philip Mission, Kalluketti, Kuzhithurai, Director of Nambikkai Alayam |
| 29. | Rev. Fr. Dency | | | 24 May 2017 | | Head of the Dept. of Liturgy |
| 30. | Rev. Fr. Antony Jose | | | 24 May 2017 | | Director of Ecumenism |

## இறையடி சேர்ந்தார்

கடந்த 17 ஆண்டுகளாக தக்கலை மறைமாவட்டத்தில் உள்ள களியல், நெட்டா, முழுக்கோடு, பிலாங்கரை மற்றும் புளியரையில் பணிபுரிந்த அருட்சகோதரி பெள்ளட் சி.எம்.சி அவர்கள் ஏப்ரல் 20, 2017 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாருடைய நல்லடக்கச்சடங்கு ஏப்ரல் 21, 2017 அன்று கேரளாவில் நாலுகோடி பங்கில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்டத்தின் சார்பில், சி.எம்.சி அருட்சகோதரிகளோடு இணைந்து அருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் பங்கேற்றார்கள்.

| BISHOP'S ENGAGEMENTS MAY 2017 | | | |
|---|---|---|---|
| *DAT* | *DAY* | *TIME* | *EVENTS* |
| 1 | Mon | 09.00 am | Moovatupuzha: First Holy Communion |
| 2 | Tue | 05.00 pm | Kunnamthanam: Holy Qurbana (CHRY) |
| 3 | Wed | 02.00 pm | Manjalumoodu: Christeen Retreat Holy Qurbana |
| 4 | Thu | 07.30 am | Edathua: Holy Qurbana |
| 5 | Fri | 11.00 am | Puthiyathurai: Kochu Edathua Holy Qurbana |
| 6 | Sat | 10.00 am<br>12.00 pm<br>04.30 pm | Munchirai: SD Sisters Foundation Day Qurbana<br>FCC Plankalai: Welcome to our dear Cardinal<br>KKSSS: Cardinal's Meet Sisters \| Fathers |
| **7** | **Sun** | **09.30 am** | **Kalluvilai: Inauguration of Sinai Retreat Centre** |
| 8 | Mon | 03.00 pm | Bp's House: Meet Fathers\|Reception to New Priests |
| 9 | Tue | 09.30 am | Priest's Conference and Felicitation of New Priests |
| 10 | Wed | 09.30 am | Marriage:\|Bp's House: Meet Final Prof. Sisters |
| 11 | Thu | 9.30 am | Curia Meeting \|Anayadi: Feast Day Qurbana |
| 12 | Fri | 07.00 pm | Bishop's House: >> Chalakudi |
| 13 | Sat | 08.00 am | Kalloor: Fr. Joy's Parents Wedding Anniversary Qurbana |
| **14** | **Sun** | **09.30 am** | **Sangamam: Meeting Kaikars and Accountants** |
| 15 | Mon | 11.00 am | Nagercoil: Marriage at Scott Christian College |
| 16 | Tue | 10.30 am | Angamalee: SJSM Jubilee Qurbana |
| 17 | Wed | 10.30 am | Mukkoottukal: Golden Jubilee of Sr. Dorethy SH |
| 18 | Thu | 10.30 am | Thuckalay: CMC Provincial House Blessing |
| 19\|20 | | | Travel to Erode\|Erode: Golden Jubilee Qurbana |
| **21** | **Sun** | **08.30 am** | **Netta: Holy Qurbana \| Vincent de Paul CC Anniversary \|Tamil Intensive Course for Sisters Starts** |
| 22-23 | Mon | | Bishop's House |
| 24 | Wed | 09.30 am | Curia Meeting \| Pala: Bishop's House |
| 25 | Thu | 10.00 am | Kodumpidi, Pala: Retreat Inaugural Mass at Thabor |
| 26 | Fri | 11.00 am | Pacha: Visit to George Kutty's Family |
| 27 | Sat | 10.30 am | Marriage Qur. Pushpagiri \|Pacha: 25 Death Anul. Qur |
| **28** | **Sun** | | **Appattuvilai: Church feast day Qurbana** |
| 29 | Mon | 08.00 am | Mankarai: House Blessing |
| 30 | Tue | 05.00 pm | Shenkottai: Meeting with priests and religious |
| 31 | Wed | | Bishop's House |

**Fr. Thomas Sathianesan** |Eparchial Secretary



Good Friday in Shengottai
14.04.2017



Farewell to St. Alphonsa
College Principal - 21.04.2017



Major Seminarians of
the Diocese




## Silver Jubilee of Religious Profession

# PRAYERFUL WISHES



Fr. Davis Karukappally CMI
Professed on 19.03.1992



Fr. Thankachan Joseph
Kollappalliyil SDB
Professed on 24.05.1992

For Private Circulation Only
IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570